# அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி, சிவகாசி

## தேசிய இளைஞர் தினம் 2017

சிவகாசி அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரியில் 06.01.2017 அன்று ''தேசிய இளைஞர் தினம்'' கொண்டாடப்பட்டது. விவேகானந்தரின் பிறந்த நாளான ஜனவரி 12-ந் தேதியை மத்திய அரசு தேசிய இளைஞர் தினமாக அறிவித்துள்ளதை முன்னிட்டு சிவகாசி ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா ஆஸ்ரமம் மற்றும் அரசன் கணேசன் பாலிடெக்னிக் கல்லூரி இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ''இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் வழங்கும் செய்திகள்'' என்ற தலைப்பில் கோயமுத்தூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் வித்யாலயாவைச் சேர்ந்த சுவாமி ஹரிவிரதானந்தர் மகராஜ் பேசினார்.




அப்போது அவர், உலகத்தில் உள்ள உயிர்களிடத்தில் உண்மையான அன்பு கொள்வதே இறைவனுக்கு நாம் செலுத்தும் உண்மையான காணிக்கை. விவேகானந்தரிடத்தில் இருந்த மனவலிமை இளைஞர்கள் ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டும். சாதிக்க வேண்டும் என்ற எண்ணம்தான் உங்களை செயல்படத் தூண்டும் திறவு கோல். சுய நலம் ஒருபோதும் கூடாது. மன ஒருமைப்பாடு முக்கியமானது. மனிதனை ஒழுக்கமுள்ளவனாக உருவாக்குவதே உண்மையான கல்வி. அந்த கல்வியை திறம்படப் படிக்க மன ஒருமைப்பாடு முக்கியம். மன ஒருமைப்பட தியானம் செய்வது நல்லது. என்னுடைய இந்திய நாட்டை நான் நேசிக்கிறேன். இந்தியாவே உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் மேலானது என்று சிகாகோவில் சுவாமிஜி ஆற்றிய உரையில் குறிப்பிடுகிறார். அந்நிய நாடு ஒன்றில் நின்றுகொண்டு தனது தாய் நாட்டைப்

பற்றி உயர்வாகப் பேசிய அவரின் தைரியம் உங்களுக்கு வரவேண்டும். உன்னுடைய விதியை நிர்ணயிப்பவன் நீதான். விதியை வெல்லும் வல்லமையை இறைவன் உனக்கு கொடுத்திருக்கிறார். ''விழுமின்-எழுமின்-இலக்கை அடையும் வரை உழைமின்'' என்ற விவேகானந்தரின் வாக்கியத்தை வாழ்க்கையில் கடைபிடியுங்கள். நிறைவான கல்வியே பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்கும். நாட்டுப் பற்றோடு நல்ல கல்வியையும் பெற்று தாய்நாட்டுக்காக வாழ்வதே இளைஞர்களாகிய உங்களின் கடமை என்று பேசினார்.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் நந்தகுமார் தலைமை தாங்கி பேசும்போது நல்ல கல்வியோடு மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும் போதிக்கும் உயர்வான பணியை முழுமையாக செய்யும் நோக்கம் இப்படிப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் நிறைவேறுகிறது. விவேகானந்தரின் கருத்துக்களை பின்பற்றுவதன் மூலம் வாழ்க்கையில் உயர்வான இடத்திற்கு இளைஞர்கள் செல்ல முடியும் என்றார்.

நிகழ்ச்சியில் சிவகாசி, ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா ஆஸ்ரமத்தின் தலைவர் மற்றும் உறுபபினர்கள் கலந்துகொண்டனர். அச்சுத்துறை விரிவுரையாளர் மாரிமுத்து வரவேற்றுப் பேசினார். மாணவர்சேவை அலகின் பொறுப்பாசிரியர் உத்தாணுமல்லையன் நன்றி கூறினார்.